**தொம்பே பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 செப்டெம்பர் 16 ஆந் திகதியன்றும் அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொம்பே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குகேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்கள சொத்துக்களினது பெறுமதியாகிய ரூபா 3,493,092 கணக்கிலிடப்படாததுடன் ரூபா 1,336,120 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் சரிவர கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கணக்கிலிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வைப்புப் பதிவேட்டின் படி ரூபா 162,777 பெறுமதியான 05 வைப்பு மீதிகள் கணக்கிலிடப்படவில்லை. | வைப்பு மீதி சரிவர கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கணக்கிலிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | செயற்திட்டங்களுக்குரிய 21 கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 8,136,746 என்பன கணக்கிலிடப்படவில்லை. | பிழையற்ற பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கணக்கிலிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | 371(2) | 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் ரூபா 82,656 முற்பண மீதியைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்பணம் தொடர்பாக கோவையோ அல்லது ஆவணமோ கிடைப்பதற்கில்லாமையால் அத்தொகையைப் பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 571 | காலாந்த கடந்த வைப்புக்களாகிய ரூபா 1,526,267 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,526,267 வைப்பை அரச வருகையில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பான அரையாண்டு நிரலைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினததிலும் கூடிய வருவாய் ரூபா 26,395,978 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 42,615,686 ஆகும்.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய்க்கான தோற்றுவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 14,191,940 | 19,427,587 | 16,317,043 | 3,110,544 | 7,362,314 | 9,335,959 | 8,134,508 | 1,201,451 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,351,800 | 52,725,117 | 52,725,117 | - | 2,978,950 | 3,065,150 | 3,065,150 | - |
| (iii) | வாடகை | 22,554,540 | 20,501,387 | 20,185,266 | 316,121 | 14,664,110 | 9,735,033 | 9,673,682 | 61,351 |
| (iv) | ஏனைய வருவாய் | - | - | - | - | - | - | - | - |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பூகொட உப அலுவலகத்தில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 5-1 ஆண்டுகள் வரையிலான 03 முதல் 10 ஆண்டுகள் வரையிலான முறையே ரூபா 54,874 ரூபா 420,024 ரூபா 83,220 உடன் தொம்பே உப அலுவலகத்தில் ரூபா 7,100 ரூபா 33,907 ரூபா 73,556 தீர்வை மீதிகளும் நிலுவையாக இருந்தன. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பூகொட உப அலுவலகத்திலும் தொம்பே உப அலுவலகத்திலும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 156,776 தீர்வை நிலுவையாக இருப்பதுடன், அவற்றுள் பெரும்பாலானவை அரச நிறுவனங்களினதாகும். இவ்வாண்டின் இறுதியின் நடமாடும் சேவையின் போது செலுத்த தடை விதிப்பின் மூலம் அறவீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிலுவை மீதி ரூபா 3,110,544 ஆகும். இதில் ரூபா 10,000 க்கு மேற்பட்ட மீதி வேகே உப அலுவலகத்தின் 09 கூறுகளுக்கும் பூகொடை உப அலுவலகத்தின் 05 கூறுகளுக்கும் உரியனவாகும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேகே உப அலுவலகத்தின் 11 கூறுகளிலிருந்து ரூபா 10,000 க்கு மேற்பட்ட தீர்வை வரி நிலுவை அறவிடப்பட்டுள்ளது. பூகொட உப அலுவலகத்தின் 13 கூறுகளில் 08 கூறுகளது |

| | | |
|---|---|---|
| | | 7பா 139,859 தொகையானது 2019 மார்ச் 31 அந் திகதியளிவில் அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.3 ஏனைய வருவாய்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்கள் தொடர்பாக 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் அடிப்படையில் உப விதிகளை அங்கீகரித்து வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வர்த்தமானியின் அடிப்படையில் வருவாயை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக உப விதிகள் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அது சம்பந்தமான ஆய்வை மேற்கொண்டு வருவாயை அறவிடுவதற்கு இவ்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597108 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பிரசுரிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படாததால் 22 கோபுரங்களுக்கான ரூபா 110,000 கிடைக்கவில்லை. | குறித்த கட்டணத்தை அறவிட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட கோபுரங்கள் தொடர்பாக பரீசீலிக்கப்பட்டு நட்டம் இருப்பின் அதனை காணி உரிமையாளரிடம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டம் 126 இன் கீழ் 18 பிரதான பணிகளுக்கான உபவிதிகள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும் 2018 திசெம்பர் 31 ஆந் | தேவையான உபவிதிகள் தயாரிக்கப்பட அல்லது கடைப்பிடிக்கப்பட வேண்டும். | பிரதேச சபைகளின் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 18 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு |

| | | |
|---|---|---|
| திகதியளவில் 16 பணிகளிற்கே உாவிதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 02 செயற்படுத்தப்படாத நிலையிலிருந்தது. | | உபவிதிகள் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 பணிகளுக்கே உபவிதிகள் தயாரிக்கப்பட்டிருந்தது. வாரச்சந்தைக் கட்டண அறவீடு வாகனத்தரிப்பிடக் கட்டண அறவீடு என்பவற்றுக்கு உபவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைக்கப்பட்ட உப விதிகளின் நிறைவேற்ற வேண்டிய 15 காணிகளின் பொருட்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | உப விதிகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | அமைக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபை நிறைவேற்ற வேண்டிய பணிகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கையில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பணியை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கேரகல ஆயுர் வேத கட்டிடத்தின் நிர்மாண வேலை மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,803,465 ஆகும். 2016 டிசெம்பர் 26 அன்று ஆரம்பமாகிய மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,192,922 வெளியிடப்பட்டு மதிப்பீட்டின் 66 சதவீதம் மாத்திரமே நிறைவேறியிருந்தது. | எதிர்பார்த்த திட்டப்படியும் கால வரையறைக்குள்ளும் நிர்மானப் பணி முடிவடைய வேண்டும். | வழங்கல் உத்தியோகத்தர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் வேலை இடமாற்றம் பெற்றமையாலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடம் காரணமாகவும் இடைக்கிடையே தாமதம் ஏற்பட்டது. வேலை முற்றாக முடிவடைந்த போதும், கட்டிடத்தின் 31 பங்கு வேலை பூர்த்தியாகியுள்ளது. |

**(ஈ) நிலைத்து நிற்க வல்க அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்க வல்ல இலக்கு சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரலை பிரதேச சபை அறிந்திராமையால் உலகளாவிய சுட்டிக் காட்டிகளின் மூலம் பிரதேச சபையின் அமதிகாரத்துக் குட்பட்ட பொது மக்களது வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரம் என்பவற்றை உயர்த்துவதற்கான நெகுல்லைத்திட்டம் 2018 ஆம் ஆண்டின் பொருட்டுத் தயாரிக்கப்படவில்லை. | திட்டம் தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் போது அமுலாக்குவதை அறிந்திராமையால் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (1) | இருபத்தைந்து பதவிகளுக்கான வெற்றிடங்கள் 15 ஆண்டுகளாக நிலவின. | ஊழியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடம் உள்ளதுடன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அதன் பொருட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் (திட்டமிடல்) பயிற்சி வழங்கும் தரத்திலான பெண் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துள்ளார். அங்கீகரிக்கப்பட்ட 06 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | 2014 டிசெம்பர் 19 ஆந் திகதிய 25.⁚.2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப தரத்திலான 07 சுகாதாரத் தொழிலாளர்கள், 06 வேலைக்களத் தொழிலாளர்கள், 04 காவலாளிகள், 01 முன்பள்ளி ஆசிரியர் என 18 பேருக்கு நிரந்தர நியமனம் | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2014 டிசெம்பர் 19 ஆந் திகதிய 25/204 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இந் நிறுவனத்தின் 18 ஆண், பெண் பாலார்க்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள போதும், கறித்த சுற்றறிக்கையின் 05 க்கமைய முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படவில்லை. | | அந் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படுவதற்கு மகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2014 டிசெம்பர் 18 அன்றும் 2018 சனவரி 18 அன்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |

### 3.2.1 சொத்துக்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 96 காணிகளில் 71 காணிகளில் எல்லைச் சுவர் அமைக்கப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அக் காணிகளில் உள்ள பெறுமதி மிக்க பரல்களை இனங்கண்டு அவற்றைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுமில்லை. | சபையின் சொத்துக்களது உரித்தும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். | பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுக் காணிகளில் எல்லைச் சுவர் அமைப்பதற்கும் அக்காணியில் உள்ள பெறுமதி மிக்க மரங்களை இனங் கண்டு பொருட் பதிவேட்டில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2.2 சொத்துக்களின் மூலம் பெறப்படக் கூடிய வருவாயைப் பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 21 கடைகள் உடன்படிக்கையின்றி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 கடைகளின் வாடகை நிலுவை ரூபா 236,921 ஆகவிருந்தது. | சபைக்குரிய சொத்துக்கள் வாடகைக்கு வழங்கப்படும் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | உடன்படிககை கைச்சாத்திடப்படாத கடைகளது உடன்படிக்கைகளில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படும். 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. பணம் செலுத்தாத கடை உரிமையாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட | நன்கொடையாகப் பெறப்பட்ட வாகனங்களைச் | 2012,2015 ஆம் ஆண்டுகள் பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| ரூபா 11,178,226 பெறுமதியான 02 வாகனங்களைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 11,178,226 பெறுமதியான 02 வாகனங்களுக்குரிய ஆவணங்களைத் தயாரித்து துரிதமாகச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2.4 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சின் மூலம் சபையின் வேண்டுகோளின்றி வழங்கப்பட்ட 422 கெல்வனைஸ் குழாய்கள் பழைய தலைமை அலுவலகக் கட்டிடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. | குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகாரச் சட்டத்தினால் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத் தன்மையை 2018 ஆம் ஆண்டில் கட்டண அறவீட்டின் மூலம் ஒரு கொடிக்கம்பத்திற்கு ரூபா 20 வருவாயாகப் பெறப்படும். |

### 3.3 பொருட் கொள்வனவு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான வீதிவிளக்குகளைக் கொள்வனவு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் போவை – 2006 இன் 8.9.1 (ஆ) பிரகாரம் உடன்படிக்கையின்றி 3300 வீதி விளக்குகள் ஒவ்வொன்றும் ரூபா 418 வீதப்படி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2018 செப்டெம்பரின் பின்னர் ரூபா 418 வீதம் விளக்குகளை வழங்குவதை வழங்குநர் நிராகரித்திருந்தார். அதனால் ரூபா 488 விலையில் 23,000 வீதி விளக்குகள் 2464 கொள்வனவு செய்யப்பட்டமையால் மேலதிகமாக ரூபா 172,480 செலவாகியது. | பொறுப்பாக உத்தியோகத்தர்களிடமிருந்து ஏற்பட்ட நட்டத்தை அறவிட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் வீதி விளக்குகள், டயர் டீயப் மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களுடன் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை – 2006 இன் 8.9.1(அ) பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்படும். |